## (ஆ) உள்நாட்டு வேளாண்மை

### 1. காணிச் சீர்திருத்தம்

1972ஆம் ஆண்டின் காணிச் சீர்திருத்த சட்டத்தின்கீழ் 50 ஏக்கருக்கு அதிகமான வேளாண்மை நிலங்கள் (25 ஏக்கரை உச்சவரம்பாகக் கொண்ட நெல் வயல்களைத் தவிர்த்து) காணிச் சீர்திருத்த ஆணைக்கு உடைமையாக்கப் பட்டிருந்ததெனக் கருதப்பட்டது. வேளாண்மை காணி அமைச்சரிடமிருந்து விசேட அனுமதி பெற்றால் அன்றி, இவ்வாறு சட்டபூர்வமாக உடைமைப் படுத்தப்பட்ட நிலங்கள் ஆகக்கூடியது இரண்டு ஆண்டு காலத்திற்குள் (அதாவது 1976, ஒகத்து 26க்கு முன்) பிரித்து வழங்கவேண்டியதாய் இருந்தது. 1974, ஒகத்து 26ஆந் திகதியில் உடமையாக்கிக்கொள்ளப்பட்ட எல்லா நிலங்களும் முந்திய சொந்தக்காரர்களின் உரிமையினின்று விடுத்து பலதரப்பட்ட நிறுவனங்களிற்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்டன.

1972ஆம் ஆண்டின் காணிச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ், காணிச்சீர் திருத்த ஆணைக்குழுவினுல் பெறப்பட்ட நிலப் பரப்பு 559,377 ஏக்கராகும். ஆணைக்குழுவிற்கு உடமையாக்கப்பட்ட நிலப்பரப்பினை அவற்றின் பயன்களின் அடிப்படையில் அட்டவணை II (ஆ) 1இல் பிரித்துக் காட்டப்படுகின்றது.

### அட்டவணை II (ஆ) 1

**காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உடமையாக்கப்பட்ட காணிகளின் விபரம்**

| நிலப்பயனின் வகை | பரப்பு ஏக்கரில் | மொத்த உடைமையாக்கப் பட்ட நிலத்தில் சதவீதம் |
|---|---|---|
| காடு, பத்தனை, பயிரிடப்படாத காணி | 182,257 | 32.6 |
| தேயிலை ... | 135,760 | 24.3 |
| தெங்கு ... | 115,350 | 20.6 |
| இறப்பர் ... | 82,944 | 14.8 |
| நெல் ... | 16,270 | 2.9 |
| பல்லினப் பயிர்கள் ... | 14,513 | 2.6 |
| ஏலம் ... | 7,699 | 1.4 |
| சேனை ... | 1,861 | 0.3 |
| கைவிடப்பட்ட தேயிலை இறப்பர் நிலங்கள் ... | 1,701 | 0.3 |
| கறுவா ... | 777 | 1.1 |
| கொக்கோ ... | 245 | 0.1 |
| மொத்தம் ... | 559,377 | 100.0 |

மூலம்: காணிச் சீர்திருத்த ஆணை.

காணிச் சீர்திருத்த ஆணைக்கு உடமையாக்கப்பட்ட நிலங்களில் ஏறக் குறைய மூன்றில் ஒரு பங்கு பயிரிடப்படாத நிலங்கள் என்பது அட்டவணையி லிருந்து காணலாம். உடமையாக்கப்பட்ட மொத்த நிலங்களில் ஏறக்குறைய நாலில் ஒரு பகுதி தேயிலையாகும். இது தேயிலைக்குட்பட்ட நிலங்களில் ஐந்தில்

ஒரு பங்காகும். உடமையாக்கப்பட்ட நிலங்களில் ஐந்தில் ஒன்று தெங்காகும். ஆனல், இது தெங்கிற்குக் கீழான நிலப்பரப்பில் 10 சதவீதத்தை மட்டுமே உள்ளடக்குகிறது. உடமையாக்கப்பட்ட நிலப்பரப்பிலும் இறப்பரிற்கு உட்பட்ட நிலப்பரப்பிலும், இறப்பர் 15 சதவீதத்தை உள்ளடக்குகிறது. உடமையாக்கப்பட்ட நிலப்பரப்பில் ஏலம் சிறிதளவாயினும் நாட்டின் ஏலப்பயிர்ச் செய்கை நிலத்தில் பெரும்பாலும் இது 70 சதவீதத்தை அடக்குகின்றது.

இந்நிலங்களின் மீளப்பகிர்ந்தளிப்பு, நிறுவனம் அல்லது முகாமைவகையாக அட்டவணை (II) 2 இல் கொடுக்கப்பட்டுள்ளது. எனினும், மீள உடமையாக்கப்பட்ட நிலங்கள் அதற்கான நியதிகள் கட்டுப்பாட்டுக்கேற்ப பயன்படுத்தாதவிடத்து, [ காணிச் சீர்திருத்தச் சட்டம் (24(2) ] மீள காணிச் சீர்திருத்த ஆணைக்கு உடமையாக்கப்படலாம். மேலும், குறிப்பிட்ட அமைப்புகட்கு கொடுக்கப்படலாம். எனவே, அட்டவணை II (ஆ) 2இல் எண்தொகைகள் அவற்றின் இறுதி நிலையல்லாததனல் இந்நிலங்களின் முடிவான அமைப்புடைய முகாமையளவை எடுத்துக்காட்டுவனவாகவில்லை.

## அட்டவணை II (ஆ) 2

### உடமை அடிப்படையாக காணிச் சீர்திருத்த நிலங்களின் பங்கீடு

| நிறுவனம் அல்லது முகாமை அடிப்படையில் | பரப்பு ஏக்கர்களில் | உடைமையாக்கப்பட்ட மொத்தப் பரப்பில் சதவீதம் |
|---|---|---|
| பகுதிக் காணிச் சீர்திருத்த அதிகாரச் சபைகள் ... | 177,719 | 31.77 |
| நில ஆணையாளர் ... | 111,375 | 19.91 |
| மலை நாட்டுக் கூட்டுறவுத் தோட்ட அபிவிருத்திச் சபை (உசவசகம) ... | 87,235 | 15.60 |
| பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ... | 48,143 | 8.61 |
| கூட்டுறவு வசிப்பிடங்கள் ... | 38,704 | 6.92 |
| அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ... | 31,791 | 5.68 |
| சிறப்புக் கூட்டுறவு அமைப்புக்கள் ... | 19,750 | 3.53 |
| தனிப்பட்ட கிராம மக்கள் ... | 13,833 | 2.47 |
| அரசாங்க ழுகவர்கள் ... | 6,450 | 1.15 |
| கால்நடை அபிவிருத்திச் சபை ... | 4,891 | 0.87 |
| தெங்கு, இறப்பர், தேயிலை ஆராய்ச்சி நிலையங்கள் ... | 2,184 | 0.39 |
| தெங்குப் பயிர்ச் செய்கைச் சபை ... | 1,235 | 0.22 |
| காட்டுப் பாதுகாப்பு ... | 785 | 0.14 |
| மாவட்ட அபிவிருத்திச் செயற்றிட்டம் ... | 754 | 0.14 |
| ஏனைய ... | 14,528 | 2.60 |
| மொத்தம் ... | 559,377 | 100.00 |

மூலம்: காணிச் சீர்திருத்த ஆணைக்குழு.

## 2. வேளாண்மை உற்பத்தி

### (அ) 1974இல நெல் உற்பத்தி

குடித்தொகை, புள்ளிவிபரத் திணைக்களத்தினல் வெளியிடப்பட்ட புள்ளி விபரங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்புநோக்குகையில், 1974இல் நெல் உற்பத்தி உயர்ந்திருந்ததென்பதைக் காட்டுகிறது. நெல் உற்பத்தி ஏறக்குறைய 22 சதவீதத்தால் 1973இல் 6,290 இலட்சம் புசல்களிலிருந்து 1974இல் 7,580 இலட்சம் புசல்களாக உயர்வடைந்திருந்தது.

இவ்வுயர்ச்சி குறிப்பாகப் பயிர்செய்யப்பட்ட பரப்பளவில் அதிகரிப்பின் காரணமாகப் பெறப்பட்டது. 1974இல் நெற்செய்கைக்குக் கீழான பரப்பளவு (அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பு) 1973ஆம் ஆண்டின் பரப்பிலும் ஏறக்குறைய 19 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இவ்வாண்டில் பயிர் விளைச்சலின்மைக்கான சூழ்நிலைகள் குறைவாக இருந்தமையே அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பின் தேறிய அதிகரிப்புக்கு ஓரளவு காரணமாகும். ஆண்டில் விதைக்கப்பட்ட பரப்பில் 3.85 சதவீதம் மட்டுமே அறுவடை செய்யப்படவில்லை. 1974இல் ஏக்கரிற்கான விளைச்சலின் உயர்வு மிகவும் சிறிதளவேயாகும் இது 1973ஐவிட ஏக்கரிற்கு 1.08 புசல்களால் அல்லது 2.42 சதவீதத்தால் மட்டும் உயர்ந்திருந்தது. எல்லா மாவட்டங்களிலும் திருந்திய நெல் இனங்களிற்குக் கீழான பரப்பளவுகள் அதிகரித்திருந்தன. அவற்றிற்கான தரவுகள் கிடைக்கத்தக்கதாயிருக்கின்றன.

1974இன் காலப்பிரிவின் வளமாக்கி வழங்கலிலும் கொடுகடனிலும் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக்கள் காணப்படுகின்றன. வளமாக்கி வழங்கல்கள் 1972/73இன் 96,816 தொன்களிலிருந்து 1973/74இல் 115,702 தொன்களாக உயர்வடைந்தன. நெல் உற்பத்திக்குக் கொடுக்கப்பட்ட கொடுகடன் 1972/73 இன் ரூ. 283 இலட்சத்திலிருந்து 1973/74இல் ரூ. 1090 இலட்சமாக உயர்வடைந்தது. வழங்கப்பட்ட கொடுகடனில் 285 சதவீத அதிகரிப்பை உள்ளடக்குகிறது இது உற்பத்திச் செலவின் அதிகரிப்பையும், கொடுகடனைத் திருப்பிக்கொடுக்கத் தவறியோருக்கு, கொடுகடனைக் கொடுப்பதில்லையென்ற ஏற்பாட்டை நீக்குவதையும் பிரதிபலிக்கிறது. 1973/74இல் வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடனே இதுகால் வரையில் நெற்செய்கைக்கு வழங்கப்பட்ட ஆகக்கூடிய கொடுகடனுகும்.

1970க்குப் பின்னர், 1974க்கான மொத்த நெல் வெளியீடே உயர்ந்ததாக இருந்ததெனினும். இது 1970இல் பெறப்பட்ட விளைச்சலைவிட சிறிதளவு குறைவாக இருந்தது. 1974இல் ஏக்கரிற்கான விளைச்சல் 1970 இன் பயிர்ச்செய்கை பருவகாலங்களைவிட குறிப்பிடத்தக்களவு குறைவாக இருந்தது. 1973/74இன் பெரும்போகத்தினதும் 1974இன் சிறுபோகத்தினதும் ஏக்கரிற்கான விளைச்சல் முறையே 47.72 புசல்களாகவும் 41.74 புசல்களாகவும் அமைகின்றன. 1969/70 பெரும்போகத்திலும் 1070 சிறுபோகத்திலும் ஏக்கருக்குரிய விளைச்சல் முறை 52.21, 44.59 புசல்களாகவும் இருந்தன. வேறு சொற்களில் கூறின், 1974இல் நெல் உற்பத்தி பயிர்ச்செய்கைப் பரப்பளவில் குறிப்பிடத்தக்களவு விரிவாக்கத்தின் காரணமாக 1970இன் கட்டத்தை ஏறக்குறைய அடைந்தது.

## அட்டவணை II (ஆ) 3

### 1973/74 பயிர்ச்செய்கை ஆண்டில் மாவட்ட அடிப்படையில் செய்கையாற்றல்(அ) — நெற் பிரிவு(ஆ)

| வலயமும் மாவட்டமும் | விதைக்கப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கர்கள்) | | அறுவடை செய்யப்பட்ட தேறிய அளவு (ஏக்கர்கள்) | | உற்பத்தி ('000 புசல்களில்) | | ஒரு ஏக்கரின் விளைச்சல் (புசல்கள்) | | திருத்திய விதைகளின் கீழுள்ள நிலப்பரப்பு | | வழங்கப்பட்ட உரம் (தொன்கள்) | | உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் கொள்வனவுகள் ('000 புசல்கள்) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெரும் போகம் 1973/74 | சிறு போகம் 1974 | பெரும் போகம் 1973/74 | சிறு போகம் 1974 | பெரும் போகம் 1973/74 | சிறு போகம் 1974 | பெரும் போகம் 1973/74 | சிறு போகம் 1974 | பெரும் போகம் 1973/74 | சிறு போகம் 1974 | பெரும் போகம் 1973/74 | சிறு போகம் 1974 | பெரும் போகம் 1973/74 | சிறு போகம் 1974 |
| ஈர வலயம் ... | 384,014 | 336,959 | 325,167 | 274,523 | 15,306 | 10,689 | 47.07 | 38.94 | 253,671 | 190,231 | 23,800 | 16,417 | 1993.8 | 1108.7 |
| கொழும்பு ... | 60,604 | 54,430 | 51,256 | 43,426 | 2,058 | 1,527 | 40.15 | 35.17 | 46,254 | 39,416 | 4,955 | 3,049 | 21.5 | 7.9 |
| களுத்துறை ... | 50,932 | 47,226 | 43,556 | 37,155 | 1,445 | 1,088 | 33.17 | 29.28 | 19,008 | 12,295 | 2,477 | 2,715 | 34.9 | 8.6 |
| காலி ... | 57,424 | 54,610 | 49,386 | 44,000 | 1,626 | 1,263 | 32.93 | 28.70 | 18,969 | 15,409 | 3,706 | 1,802 | 93.7 | 49.0 |
| மாத்தறை ... | 48,106 | 47,287 | 40,808 | 37,825 | 1,669 | 1,312 | 40.90 | 34.68 | 31,000 | 33,241 | 3,511 | 2,322 | 170.1 | 61.8 |
| கேகாலை ... | 27,466 | 26,825 | 23,019 | 22,182 | 1,250 | 871 | 54.31 | 39.25 | 23,246 | 26,605 | 2,190 | 1,193 | 52.1 | 39.5 |
| இரத்தினபுரி ... | 37,061 | 35,227 | 31,261 | 29,623 | 1,251 | 1,160 | 40.02 | 39.15 | 22,485 | 14,969 | 1,805 | 2,188 | 623.0* | 366.6* |
| கண்டி ... | 48,424 | 44,352 | 40,639 | 37,586 | 2,527 | 2,279 | 62.19 | 60.65 | 41,791 | 30,717 | 3,306 | 2'353 | 546.0 | 387.4 |
| நுவரெலியா ... | 18,107 | 12,512 | 15,318 | 10,494 | 1,484 | 674 | 96.85 | 64.24 | 17,521 | 8,956 | 684 | 459 | 49.3 | 9.4 |
| பதுளை ... | 35,890 | 14,490 | 29,924 | 12,232 | 1,996 | 515 | 66.69 | 42.08 | 33,397 | 8,623 | 1,166 | 336 | 403.2 | 178.5 |
| வெப்ப வலயம் ... | 933,824 | 383,280 | 777,703 | 304,428 | 37,326 | 13,477 | 48.0 | 44.27 | வி. கி. | வி. சி. | 55,275 | 20,210 | 13198.6 | 4563.8 |
| புத்தளம் ... | 34,007 | 11,015 | 26,299 | 8,330 | 847 | 265 | 32.21 | 31.77 | 24,440 | 10,493 | 1,420 | 346 | 132.3 | 68.2 |
| குருநாகல் ... | 143,582 | 112,973 | 120,215 | 90,535 | 4,672 | 3,636 | 38.86 | 40.16 | 92,903 | 104,123 | 9,409 | 5,485 | 585.5 | 532.8 |
| மாத்தளை ... | 28,163 | 16,116 | 23,432 | 13,457 | 1,145 | 573 | 48.88 | 42.60 | 25,141 | 11,094 | 1,662 | 392 | 351.5 | 103.7 |
| பொலனறுவை ... | 21,656 | 4,568 | 18,119 | 3,798 | 1,072 | 160 | 59.15 | 42.02 | 18,982 | வி. கி. | 999 | 236 | 379.4* | 84.1* |
| யாழ்ப்பாணம் ... | 86,735 | 11,425 | 69,803 | 9,684 | 2,634 | 427 | 37.74 | 44.12 | 62,932 | வி. கி. | 6,834 | 1,432 | 312.5 | 19.5 |
| வவுனியா ... | 55,860 | 4,187 | 45,350 | 3,547 | 1,839 | 184 | 40.55 | 51.89 | 53,174 | 4,032 | 3,566 | 161 | 669.0 | 40.7 |
| மன்னார் ... | 47,222 | 4,334 | 40,707 | 1,210 | 2,278 | 40 | 55 95 | 32.79 | 44,645 | 3,184 | 3,214 | 181 | 765.2 | 2 .8 |
| அநுராதபுரம் ... | 134,805 | 30,811 | 113,470 | 24,566 | 5,713 | 1,016 | 50.35 | 41.38 | வி. கி. | வி. கி. | 4,906 | 974 | 1618.3 | 691.4 |
| பொலநறுவை ... | 70,264 | 43,572 | 58,776 | 36,694 | 4,836 | 1,805 | 82.28 | 49.19 | 58,783 | 37,368 | 5,511 | 3,035 | 3084.4 | 989.0 |
| திருகோணமலை ... | 57,126 | 10,933 | 48,286 | 9,095 | 2,080 | 493 | 43.08 | 54.25 | வி. கி | வி. கி. | 3,005 | 399 | 1037.7 | 266.1 |
| மட்டக்களப்பு .. | 91,141 | 25,648 | 76,801 | 17,852 | 3,065 | 724 | 39.91 | 40.55 | 85,808 | 15,416 | 5,614 | 1,122 | 861.7 | 78.9 |
| அம்பாறை ... | 101,021 | 60,598 | 84,788 | 46,254 | 3,748 | 1,724 | 44.20 | 37.27 | 94,485 | வி. கி. | 5,103 | 4,657 | 1916.6 | 866.6 |
| அம்பாந்தோட்டை | 46,079 | 30,990 | 37,918 | 25,712 | 2,375 | 1,542 | 62.64 | 59.98 | 44,303 | 28,370 | 3,765 | 1,624 | 1484.5* | 802.0* |
| உடவளவை ... | 16,163 | 16,110 | 13,739 | 13,694 | 1,022 | 888 | 74.42 | 64.83 | 13,607 | 13,508 | 267 | 166 | — | — |
| இலங்கை ... | 1,317,838 | 720,239 | 1,102,870 | 578,951 | 52,632 | 24,166 | 47.72 | 41.74 | வி. கி. | வி. கி. | 79,075 | 36,627 | 15192.4 | 5672.5 |

வி. கி. = விபரம் கிடைக்கவில்லை.

அ. 1973/74 (செத்தெம்பர்/ஒற்றோபர் – மாச்சு/ஏப்பிரல்) பெரும் போகத்தையும், 1974 சிறு போகத்தையும் (ஏப்பிரல்/மே – ஓகத்து செத்தெம்பர்) பயிர்ச்செய்கை ஆண்டு உள்ளடக்குகிறது.

ஆ. தற்காலிக மதிப்பீடுகள்.

* உடவளவையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நெல்லையும் உள்ளடக்கும்.

மூலங்கள்: குடித்தொகை புள்ளிவிபரத் திணைக்களம், வேளாண்மை காணி அமைச்சு, நெல் சந்தைப்படுத்தும் சபை.

நெற்றுறையின் செயலாற்றம் இரண்டு பருவ காலங்களான 1973/74 இன் பெரும்போகம், 1974இன் சிறுபோகம் எனப் பிரிக்கப்பட்டுப் பகுப்பாய்வு செய்யப்படுகிறது, இவ்விரண்டு பருவகாலங்களின் தரவுகள் அட்டவணை II (ஆ) 3இல் கொடுக்கப்பட்டுள்ளன.

**1973/74 பெரும்போகம்**

குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினுல் வெளியிடப்பட்ட தரவுகளின் படி 1973/74 பெரும்போகத்தின் மொத்த நெல் உற்பத்தி 526 இலட்சம் புசல்களாகும். இது 1972/73 பெரும்போகத்தைக்காட்டிலும் ஒரு 25 சதவீத அதிகரிப்பாகவும் ஒரு பெரும்போகத்திற்கான உயர்ந்த மொத்த உற்பத்தி யாகவும் விளங்குகிறது. இவ்வதிகரிப்பானது, பயிர்செய்யப்பட்ட பரப்பளவின் விரிவாக்கத்தாலும், ஏக்கரிற்கான விளைச்சலின் அதிகரிப்பாலும் அடையப்பட்டது. விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பளவு 1972/73 பெரும்போகத்தின் 11.8 இலட்ச ஏக்கரிலிருந்து 1973/74 பெரும்போகத்தில் 13.2 இலட்ச ஏக்கர்களாக அதிகரித்தவேளையில் பருவகாலங்களின் அறுவடை முறையே 10.9 இலட்ச ஏக்கரிலிருந்து 12.9 இலட்ச ஏக்கராக அதிகரித்தது. விதைக்கப்பட்ட பரப்பளவில் அறுவடை செய்யப்படாத பரப்பு 29,476 ஏக்கர்கள் அல்லது 2.24 சதவீதமாகும். இது விதைக்கப்பட்ட பரப்பில் குறைவான பயிர்ச்செய்கை யிழப்பை எடுத்துக்காட்டுகின்றது.

தேறிய ஏக்கருக்கான அறுவடையின் சராசரி விளைச்சல் 1972/73 பெரும் போகத்தின் 45.54 புசல்களிலிருந்து 1973/74 பெரும்போகத்தில் 47.7 புசல்களாக உயர்வடைந்தது. பெரும்போகப் பயிரின் உள்ளீடுகளில் குறிப்பிடத் தக்களவு அதிகரிப்பு காணப்பட்டது. புதிய கொடுகடன் திட்டத்தின்கீழ் நெற் பயிர்ச்செய்கைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் மூன்று மடங்குக்கு மேலாக 1972/73 பெரும்போகத்தின் ரூ. 203 இலட்சத்திலிருந்து 1973/74 பெரும் போகத்தில் ரூ. 842 இலட்சமாக அதிகரிக்கப்பட்டது. முன்னைய பெரும் போகத்தைக் காட்டிலும் வழங்கப்பட்ட வளமாக்கி 22,995 தொன்களால் அல்லது 41 சதவீதத்தால் அதிகரித்தது. 1973/74 பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட்ட ஏக்கரிற்கான நெற்காணிக்கு வழங்கப்பட்ட வளமாக்கி 137.5 இருத்தல்களாக விளங்கியது. ஒப்புநோக்குகையில் சென்ற பெரும் போகத்தில் 115.8 இருத்தல்கள் வழங்கப்பட்டன. சீராக்கப்பட்ட இனங்களிற்கு உட்பட்ட பரப்பளவு அதிகரிக்கப்பட்டதென்பதை முழுமையற்ற தரவுகள் காட்டுகின்றன.

**1974 சிறுபோகம்**

குடிமதிப்பு புள்ளிவிவரத் திணைக்களத் தரவுகளின்படி, 1974இன் சிறு போகத்தின் மொத்த நெல் உற்பத்தி 242 இலட்சம் புசல்களாகும். இது, 1973 சிறுபோக நெல் உற்பத்தியைவிட 15.6 சதவீதத்தால் உயர்வாக அமைந்தாலும், 1970, 1971 சிறுபோக உற்பத்தியைக் (முறையே 28.0, 25.3 இலட்ச புசல்களாகும்) காட்டிலும் மேம்பாடு உடையதாக அமையவில்லை.

1974 சிறுபோக வெளியீடு அதிகரிப்பிற்கு விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பின் 17.5 சதவீத அதிகரிப்பும் 1973இன் சிறுபோகத்தில் அறுவடை செய்யப்பட்ட மொத்தப் பரப்பின் 18.5 சதவீத அதிகரிப்பும் காரணிகளாக அமைகின்றன. 1973 சிறுபோகத்துடன் ஒப்புநோக்குகையில் 1974 சிறுபோகத்தில் விதைத்து அறுவடை செய்யப்பட்ட பரப்புக்களது, சதவீதங்களின் வேறுபாடு குறைவான பயிர் இழப்பினைக் காட்டுகிறது. விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பில் அறுவடை செய்யப்படாத நிலப்பரப்பு 5.43 சதவீதமாகும். மொத்த விதைக்கப்பட்ட பரப்பில் திருந்திய விதை இனங்கட்குக் கீழான பரப்பில் ஒரு அதிகரிப்பு ஏற்பட்டதென்பதை முற்றுப்பெறாத தரவுகள் காட்டுகின்றன. புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கொடுகடன் பங்கீடு 210 சதவீதத்தால் உயர்வடைந்ததுடன், 1973, சிறுபோகத்தின் ரூ. 80 இலட்சத்திலிருந்து 1974 சிறுபோகத்தில் ரூ. 248 இலட்சமாக அதிகரித்தது. வளமாக்கி வழங்கல் 1973இன் சிறுபோகத்தில் 40,736 தொன்களாக இருந்ததுடன் ஒப்பிடுகையில் 1974 சிறுபோகத்தில் 36,627 தொன்களாகும். அறுவடையான நெல் நிலத்திற்கு ஏக்கருக்கான வளமாக்கி வழங்கல் முன்னைய சிறுபோகத்தின் 158.8 இறுத்தல்களிலிருந்து 1974இல் 119.9 இறுத்தல்களாகியது.

### உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் நெல் கொள்முதல்

குடித்தொகை புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபரங்களில் காட்டப்பட்ட சிறந்த நெல் உற்பத்தித் தொழிற்பாடுகட்குமாறாக உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் (உ. வி. தி.) நெல் சந்தைப்படுத்தற் சபையினால் (நெ. ச. ச.) செய்யப்பட்ட கொள்வனவுகள் எதிர்பார்க்கப்பட்டதிலும் குறைவாகும். நெ.ச. சபைக்கு நெல் கொள்வனவிற்கான தனியுரிமை வழங்கப்பட்ட நிலையிலும் மக்கள் நெல் கொண்டுசெல்வதில் குறிப்பிடத்தக்களவு தடைகள் விதிக்கப்பட்ட நிலையிலும் நெ. ச. சபையால் 1974இன் உற்பத்தியில் 27 சதவீதம் மட்டுமே கொள்வனவு செய்யப்பட்டது. இது சென்றவாண்டு மொத்த நெல் உற்பத்தியின் 36 சதவீதக் கொள்வனவிலும் மிகவும் குறைவாகும். 1972 சனவரியில் நெ. ச. சபை கமத்தொழில் சேவைத் திணைக்களத்தின் நெல் கொள்வனவு செயற்பாடுகளை கையேற்றதெனினும், இரண்டு அமைப்புக்களும் 1972 ஏப்பிரல் வரை நெல்லைக் கொள்முதல் செய்தன. 1972 ஏப்ரலின் பின் நெற் சந்தைப்படுத்தும் சபையே கொள்வனவைத் தனியே பொறுப்பேற்றது. 1970/71 க்குப் பின்னர் நெற் கொள்முதல்கள் கொள்முதல் அளவிலும் மொத்த உற்பத்தியிலும் வீழ்ச்சியடைந்தன. இதை அட்டவணை II (ஆ) 4இல் கண்டு தெளியலாம்.

அட்டவணை II (ஆ) 4

உ. வி. தி கொள்முதல்களும் நெல் உற்பத்தியும் 1969/70 – 1973/74

| ஆண்டு | மொத்த நெல் உற்பத்தி (000 புசல்கள்) | உ. வ. தி கொள்முதல்கள் (000 புசல்கள்) | மொத்த உற்பத்தியின் சதவீதம் |
|---|---|---|---|
| 1969/70 | 77447.0 | 26218.4 | 33.9 |
| 1970/71 | 66895.0 | 32376.5 | 48.4 |
| 1971/72 | 62720.0 | 25213.7 | 40.2 |
| 1972/73 | 62900.0 | 22892.1 | 36.4 |
| 1973/74 | 76798.0 | 20864.9 | 27.2 |

மூலம்: வேளாண்மை காணிகள் அமைச்சு'
நெற் சந்தைப்படுத்தற் சபை.

## அட்டவணை II (ஆ) 5

### நெல் சந்தைப்படுத்தும் சபையின் நெல் கொள்முதல்கள் 1973 – 1974ஆம் ஆண்டுகளின் உற்பத்தி விகிதப்படி வலயங்கள் பருவ காலாண்டுகளின்படி

(புசல்களில்)

| வலயம் | 1973 | | | | 1974 | | | | 1973 | | 1974 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெரும்போகம் 1972/73 | | சிறு போகம் 1973 | | பெரும்போகம் 1973/74 | | சிறுபோகம் 1974 | | | | | |
| | கொள்வனவுகள் | மொத்த உற்பத்தியின் சத வீதம் | கொள்வனவுகள் | மொத்த உற்பத்தியின் சத வீதம் | கொள்வனவுகள் | மொத்த உற்பத்தியின் சத வீதம் | கொள்வனவுகள் | மொத்த உற்பத்தியின் சத வீதம் | கொள்வனவுகள் | மொத்த உற்பத்தியின் சத வீதம் | கொள்வனவுகள் | மொத்த உற்பத்தியின் சத வீதம் |
| ஈர வலயம் | 2,341,000 | 19.2 | 830,000 | 8.4 | 1,993,800 | 13.1 | 1,108,700 | 10.4 | 3,171,000 | 14.3 | 3,102,500 | 11.9 |
| வெப்ப வலயம் | 16,354,000 | 54.9 | 3,118,000 | 28.3 | 13,198,600 | 35.4 | 4,563,800 | 33.9 | 19,472,000 | 47.7 | 17,762,400 | 35.0 |
| மொத்தம் | 18,695,000 | 44.5 | 3,948,000 | 18.8 | 15,192,400 | 28.9 | 5,672,500 | 23.5 | 22,643,000 | 36.0 | 20,864,900 | 27.2 |

மூலம்: குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களமும், நெல் சந்தைப்படுத்தும் சபையும்.

அட்டவணை II (ஆ) 5இல் 1973இலும் 1974இலும் உலர்வலயத்திலும், ஈரவலயத்திலும், பருவ்கால அடிப்படையிலும், சதவீத அடிப்படையிலும் செய்யப்பட்ட கொள்வனவுகள் தரப்பட்டுள்ளன. கடந்த ஆண்டுகளைப்போல் குறிப்பிடத்தக்களவு நெல் கொள்முதல்கள் உலர்வலய மாவட்டங்களில் அமைகின்றன.

**(ஆ) துணை உணவுப் பயிர்கள்**

1972/73, 1973/74 பயிர்ச்செய்கைக் காலங்கட்கான துணை உணவுப் பயிர்களின் தொழிற்பாடுகள் அட்டவணை II (ஆ) 6இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை II (ஆ) 6**

**1972/73, 1973/74 ஆம் பயிர்செய் ஆண்டுகளில்(அ) உப உணவுப் பயிர்ப் பிரிவின் சாதனை(ஆ)**

| பயிர் | பயிரிடப்பட்ட அளவு (ஏக்கர்கள்) | | உற்பத்தி (அந்தர்) | | ஒரு ஏக்கரில் விளைச்சல் (அந்தர்) | |
|---|---|---|---|---|---|---|
| | 1972/73 | 1973/74 | 1972/73 | 1973/74 | 1972/73 | 1973/74 |
| மரவள்ளி .. | 127,137 | 225,642 | 13,022,600 | 16,723,912 | 102.43 | 74.12 |
| சோளம் ... | 59,928 | 95,128 | 268,381 | 469,394 | 4.48 | 4.93 |
| மிளகாய் ... | 90,903 | 102,672 | 382,427 | 312,580 | 4.21 | 5.10 |
| வெங்காயம் ... | 17,288 | 15,956 | 1,342,945 | 1,396,793 (1) | 77.68 | 87.54 |
| நிலக்கடலை ... | 15,378 | 19,078 | 181,814 | 144,774 | 11.82 | 7.59 |
| பயறு ... | 13,193 | 26,417 | 62,852 | 115,991 | 4.76 | 4.39 |
| சோகம் .. | 2,982 | 3,048* | 22,160 | 30,249* | 7.43 | 9.92* |
| சோயா அவரை ... | 387 | 3,232 | 4,463 | 24,816 | 11.53 | 6.08 |
| உருளைக் கிழங்கு ... | 7,011 | 2,545** | 1,063,040 | 180,480** | 151.62 | 70.92** |
| பம்பாய் வெங்காயம் .. | 434 | 447 | 14,498 | 21,594 | 33.41 | 60.94 |
| குரக்கன் .. | 53,944** | 67,872* | 382,011 | 282,369 | 5.36** | 4.16 |
| எள்ளு ... | 17,117 | 32,108 | 56,739 | 96,857 | 3.31 | 3.02 |
| மினேரி ... | 1,101** | வி. கி. | 3,932** | வி. கி. | 3.57** | — |
| கொள்ளு .. | 563** | 2,574 * | 12,479 | 15,728 | 3.47** | 6.11 |
| அரிசி .. | 178** | வி. கி, | 636** | வி. கி. | 3.57** | — |
| கறுப்புக் கச்சான் ... | 112** | 3,439 | 6,817 | 12,877 | 8.91** | 3.74 |
| பருப்பு .. | 71** | 3,274** | 987** | 32,727 | 13.90** | 10.00 |

மூலம்: வேளாண்மை காணி அமைச்சும்.

(அ) தற்காலிக மதிப்பீடு

(ஆ) அட்டவணை II (ஆ) 3 அடிக்குறிப்பு (அ)வில் பயிரிடும் ஆண்டு என்பது வரையறை செய்யப்பட்டுள்ளது.

(1) பச்சை மிளகாய் 183,238 அந்தர்களையும் உள்ளடக்கியது.

(2) 88,290 அந்தர் தாளுடன் சேர்ந்த வெங்காயத்தையும் உள்ளடக்கியது.

* சிறுபோகம் மட்டும் ** பெரும்போகம் மட்டும் வி. கி. — விபரம் கிடைக்கவில்லை.

1972/73 பயிர்செய்கை ஆண்டில் 406,448 ஏக்கர்களுடன் ஒப்புநோக்க 1973/74ஆம் பயிர்ச்செய்கை ஆண்டில் அட்டவணையின் பட்டியலிலுள்ள பதினைந்து துணை உணவுப் பயிர்கள் (மெனேரிக்கும், சாமியரிசிக்குமான முழுமையான தரவுகள் கிடைக்கவில்லை) 603,432 ஏக்கர்கள் பரப்பினை உள்ளடக்குகின்றன. 1973/74இல் பட்டியலில் காட்டப்பட்டுள்ள பதினைந்து பயிர்களில்,

மரவள்ளி, மிளகாய், சோளம், குரக்கன், எள், பாசிப்பயறு என்பவை 549,839 ஏக்கர்களைக் கொண்டுள்ளதுடன், இது மொத்த ஏக்கர் பரப்பில் 91.1 சதவீதத்தை உள்ளடக்குகின்றது. 1972/73 உடன் ஒப்புநோக்க, 1973/74 இல் மரவள்ளி சோளம், மிளகாய், சின்ன வெங்காயம், பாசிப்பயறு என்பனவற்றின் உற்பத்தி அதிகரித்துள்ளது.

**1974இல் மாற்றங்கள்**

இவ்வாண்டுக் காலப்பிரிவில் 390 வேளாண்மை உற்பத்தியாக்கக் குழுக்கள் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து அவற்றின் மொத்த எண்ணிக்கை 473 ஆகியது. முடிவில், 480 குழுக்கள் நிறுவப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1974இன் காலப்பிரிவில் 125 வேளாண்மைப் பணி நிலையங்கள் திறக்கப்பட்டதுடன், இத்தகைய நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 208 ஆகியது.

ஒரு புசல் நெல்லிற்கான உத்தரவாத விலை 1974 மார்ச்சில் ரூ 25 இலிருந்து ரூ. 30 ஆகவும் யூலையில் ரூ. 33 ஆகவும் உயர்த்தப்பட்டது.

இவ்வாண்டில் நெல்லிற்கு வழங்கப்பட்ட வளமாக்கி உதவுதொகையில் இரண்டு மாற்றங்கள் ஏற்பட்டன. விதந்துரைக்கப்பட்ட வளமாக்கி அளவின் சராசரிச் செலவானது யூலையில் நாலு மடங்கு அதிகரிப்பால் ரூ. 50 இலிருந்து ரூ. 250 ஆக உயர்ந்தது. பின்னர், இவ்வளவு ரூ. 160 ஆக குறைக்கப்பட்டது. 1974, யூலைக்கு முன்பிருந்த செலவிலும் பார்க்க இறுதியான செலவு 220 சதவீதத்தால் உயர்வாகும். எனினும், இவ்விலை உயர்ச்சிகள் அறிக்கையில் ஆராயப்பட்டவாறு, 1974இன் பயிர்ச்செய்கைப் பருவங்களைப் பாதிக்கவில்லை. விலையுயர்ச்சி 1974/75 இன் பெரும்போகத்தில் வளமாக்கிப் பயன்பாட்டைப் பாதிக்கலாம். வளமாக்கி விலையுயர்ச்சியின் விளைவினைத் தனியாகத் தீர்மானிப்பது கடினம். ஏனெனில், உலர்வலயத்தில் வரட்சியின் விளைவுகள் முதன்மையான காரணியாக இருந்தன.

1974/75இன் பெரும்போகத்தில் நாடெங்கிலும் நடைமுறைப்படுத்தப்படவிருந்த வேளாண்மைக் காப்புறுதித் திட்டமானது வரட்சியின் காரணமாகப் பின்போடப்பட்டது. இத்திட்டம் 1975 சிறுபோகம் முதல் நடைமுறைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**3. கிராமிய வங்கித்தொழிலும் கொடுகடனும்**

1974இல் கிராமியத் துறைக்கான கொடுகடன், முதன்மையாகப் புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டத்தின்மூலம் கூட்டுறவு கிராம வங்கிகள், வேளாண்மைப் பணி நிலையங்களிலுள்ள இலங்கை வங்கியின் துணை அலுவலகங்கள் வாயிலாகக் கொடுக்கப்பட்டன. 1973 இல் புகுத்தப்பட்ட விரிவான கிராமியக் கொடுகடன் திட்டத்தை கிராமியக் கூட்டுறவு வங்கிகளும் இலங்கை

வங்கியின் துணை அலுவலகங்களும் செயல்முறைப்படுத்தின. இந்நிலையங்கள் நிறுவப்படாத பகுதிகளில் அல்லது விரிவான கிராமியக் கொடுகடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தொடங்காத பகுதிகளில் கடந்த காலத்தைப் போல் மக்கள் வங்கி வேளாண்மைக் கடன்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக வழங்கின. இவ்வாண்டில் இவ்வெல்லாத் திட்டங்களின்கீழ் வழங்கப்பட்ட கடன்களின் தொகை ரூ. 1,365 இலட்சமாகும். மேலும், கிராமிய துறைக்கான கொடுகடன் சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காக, அரச திணைக்களங்கள் நடைமுறைப்படுத்திய திட்டங்களால் வர்த்தக வங்கிகளாலும் சிறப்புக் கொடுகடன் நிலையங்களாலும் வழங்கப்பட்டது.

புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டம் விரிவான கிராமக் கொடுகடன் திட்டம் என்பவற்றின்கீழ் குறிப்பிடப்பட்ட பயிர்கட்கு வழங்கப்படும் வேளாண்மைக் கடன்கட்கு திருப்பிக் கொடுக்கத் தவறிய கடன்தொகையில் 75 சதவீத அளவுக்கு இலங்கை மத்திய வங்கி ஒரு அரிசி உத்தரவாதத் திட்டத்தினை செயற்படுத்தியது.

### (i) புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டம்

கூட்டுறவு கிராமிய வங்கிகள் இதுவரையில் நிறுவப்படாத அல்லது இவ் வங்கிகள் 1973ஆம் ஆண்டின் விரிவான கிராமக் கொடுகடன் திட்டத்தினை இதுவரையில் நடைமுறைப்படுத்தத் தொடங்காத பகுதிகளில் மக்கள் வங்கி 1967ஆம் ஆண்டில் புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. கடன்கள் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களின்வாயிலாக வழங்கப்பட்டன. 1974 சிறுபோக இறுதிவரை நடைமுறையிலிருந்த கொடுகடன் வரையறைகள் உற்பத்திச் செலவுகளின் அதிகரிப்பின் காரணமாக 1974, செத்தெம்பர் 23 தொடக்கம் உயர்த்தப்பட்டது.[1]

முன்போல, புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டமே உள்நாட்டு வேளாண்மைக்கான முதன்மையான கொடுகடன் நிலையமாக விளங்கியது இவ்வாண்டுக் காலப்பிரிவில் நெல்லிற்கும் துணை உணவுப் பயிர்கட்கும் வழங்கப்பட்ட மொத்தத் தொகையான ரூ. 1,161 இலட்சத்தில், ரூ. 1093 இலட்சம் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டது;

#### (அ) நெல்லிற்கான கடன்கள்

புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கொடுகடன்களின் தொகை, மீளச் செலுத்திய தொகைகள், செலுத்தத் தவறிய தொகை என்பன அட்டவணை II (ஆ) 7இல் கொடுக்கப்பட்டுள்ளன.

---

1. விவரங்கட்கு, இலங்கை மத்திய வங்கியின் 1974 செத்தெம்பர் மாதச் செய்தித்திரட்டைப் பார்க்க.

## புதிய வேளாண்மைக் கொடுகடல்

| விடயம் | தொகை பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெரும் போகம் 67/68 | சிறு போகம் 1968 | பெரும் போகம் 68/69 | சிறு போகம் 1969 | பெரும் போகம் 69/70 | சிறு போகம் 1970 | பெரும் போகம் 70/71 | சிறு போகம் 1971 | பெரும் போகம் 71/72 | சிறு போகம் 1972 | பெரும் போகம் 72/73 | சிறு போகம் 1973 | பெரும் போகம் 73/74 |
| வழங்கப்பட்ட கடன்கள் | 61.4 | 11.3 | 45.8 | 9.9 | 39.3 | 12.4 | 23.5 | 5.8 | 24.0 | 6.7 | 20.3 | 8.0 | 84.2 |
| மொத்த மீளக் கொடுப்பனவுகள் | 52.7 | 9.7 | 28.2 | 8.1 | 20.3 | 8.6 | 12.5 | 4.9 | 14.4 | 5.1 | 12.6 | 4.6 | 36.1 |
| இவற்றில் (அ) தன்விருப்பில் | 43.7 | 9.2 | 26.1 | 7.8 | 20.3 | 8.0 | 12.5 | 4.9 | 14.4 | 5.1 | 12.6 | 4.6 | 36.1 |
| (ஆ) அரிசிப் பங்கீடு | 9.0 | 0.5 | 2.1 | 0.3 | — | 0.6 | — | — | — | — | — | — | — |
| பயிர் விளையாமையால் நீடிக்கப்பட்டவை | 0.1 | — | 0.8 | — | 0.1 | — | — | — | — | — | — | — | — |
| வரத்தவறுதவை ஆனால் வரவேண்டியவை | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | 0.8 |
| வரத் தவறியவை | 8.6 | 1.6 | 16.8 | 1.8 | 18.9 | 3.8 | 11.0 | 0.9 | 9.6 | 1.6 | 7.7 | 3.4 | 47.3 |

* நிறைவு பெறாத தரவுகள்.

...ட்டம் — நெற் கடன்கள்

| சிறு போகம் 1974 | பெரும் போகம்* 74/75 | வழங்கப்பட்ட தொகையின் சதவீதமாக | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் 67/68 | சிறு போகம் 1968 | பெரும் போகம் 68/69 | சிறு போகம் 1969 | பெரும் போகம் 69/70 | சிறு போகம் 1970 | பெரும் போகம் 70/71 | சிறு போகம் 1971 | பெரும் போகம் 71/72 | சிறு போகம் 1972 | பெரும் போகம் 72/73 | சிறு போகம் 1973 | பெரும் போகம் 73/74 | சிறு போகம் 1974 | பெரும் போகம் 74/75 |
| 24.8 | 42.4 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| 10.4* | 0.1 | 85.9 | 85.8 | 61.6 | 81.8 | 51.6 | 69.4 | 53.2 | 84.5 | 60.0 | 76.1 | 62.1 | 57.5 | 42.9 | 41.9 | 0.2 |
| 10.4 | 0.1 | 71.2 | 81.4 | 57.0 | 78.8 | 51.6 | 64.5 | 53.7 | 84.5 | 60.0 | 76.1 | 62.1 | 57.5 | 42.9 | 41.9 | 0.2 |
| — | — | 14.7 | 4.4 | 4.6 | 3.0 | — | 4.9 | — | — | — | — | — | — | — | — | — |
| — | — | 0.1 | — | 1.7 | — | 0.3 | — | — | — | — | — | — | — | — | — | — |
| 13.2 | 42.3 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | 0.9 | 53.2 | 99.8 |
| 1.2 | — | 14.0 | 14.2 | 36.7 | 18.2 | 48.1 | 30.6 | 46.8 | 15.5 | 40.0 | 23.9 | 37.9 | 42.5 | 56.2 | 4.9 | — |

மூலம்: மக்கள் வங்கி.

புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டத்தின்கீழ் 1973/74 பெரும் போகத்திற்கான கடன் வழங்கல்கள், அவற்றின் பயன்பாட்டில் ஒரு பெரும் வீழ்ச்சிப் போக்கைக் காட்டுகின்றன. பருவகாலப்பிரிவில் வழங்கப்பட்ட மொத்தத் தொகையான ரூ. 842 இலட்சம் 1972/73 பெரும்போகத்தில் வழங்கப்பட்டதிலும் ஒரு குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைக் (314.8 சதவீதம்) கொண்டுள்ளது. இவ்வுயர்மட்ட கொடுகடன் பங்கீட்டுக்கு 1973இல் மேல் உயர்த்தப்பட்ட கொடுகடன் வரையறைகள், பெற்ற கடனைத் திருப்பிக்கொடுக்கத் தவறியவர்கள் மீண்டும் கொடுகடன் பெறத் தகுதி பெற்றமை, உணவு உற்பத்தி இயக்கம் வற்புறுத்தப்பட்டதன் காரணமாக கடன் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை என்பனவற்றை முதன்மையான காரணங்களாகக் கொள்ளலாம். முன்னைய சிறுபோக பருவத்தில் வழங்கப்பட்ட தொகையிலும் பார்க்க 1974இன் சிறுபோகத்தில் நெற்பயிர் செய்கைக்கு வழங்கப்பட்ட கடன்கள் 210.0 சதவீதத்தால் அதிகரித்தன. 1973/74 பயிர்ச்செய்கை ஆண்டிற் பயன்படுத்தப்பட்ட மொத்தக் கொடுகடன் ரூ. 1090 இலட்சமாகும்: இது 1967இல் திட்டம் தொடக்கப்பட்டதின் பின்பு எந்தப் பயிர்ச்செய்கை ஆண்டிலும் பயன்படுத்தப்பட்ட கொடுகடன் மட்டத்திலும் உயர்ந்ததாகும்.

1974/75 ஆம் ஆண்டு பெரும்போகத்திற்கான முழுமையற்ற தரவுகள் நெற்பயிர்ச்செய்கைக்கு ரூ. 424 இலட்சம் வழங்கப்பட்டதென்பதைக் காட்டுகின்றன. இது முன்னைய பெரும்போகக் காலத்தில் பங்கிடப்பட்ட மொத்தக் கொடுகடனின் அரைப்பங்காகும்.

1972/73ஆம் ஆண்டு பெரும்போக காலத்தில் மீளச் செலுத்தப்பட்ட கடன்களான 62.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1975/74ஆம் ஆண்டுப் பெரும்போகக் காலக் கடனில் 42.9 சதவீதம் மீளச் செலுத்தப்பட்டது. புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டத்தின் பின்னர் எந்தவொரு பெரும்போகத்திலும் பதிவுசெய்து மீளப்பெற்ற தொகைகளில் இதுவே குறைவான தொகையாகவும் குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின்படி 1973/74ஆம் ஆண்டு பெரும்போகத்தில் பெறப்பட்ட உயர்ந்த மட்ட நெல் உற்பத்தியையும் குறைவான பயிர் அழிவு நிகழ்ச்சியினையும் நோக்கும்பொழுது இதன் சாதனை மிகவும் குறைவானதாகும். 1973/74ஆம் ஆண்டுப் பெரும்போகத்தில் இக்குறைவான மீளப்பெற்ற அளவிற்கு நெ. ச. ச. ஆல் செய்யப்பட்ட குறைந்தளவு நெல் கொள்வனவுகள் மூலம் விளக்கம் கூறலாம். எண்தொகைகள் முழுமையாக இன்மையால் 1974 ஆம் ஆண்டின் சிறுபோகத்தில் மீளப் பெறப்பட்ட 41 9 சதவீதக் கடனின் அளவு இறுதியான நிலையைக் காட்டுவதாக இல்லை.

1973/74ஆம் ஆண்டுப் பெரும்போகம் 1974ஆம் ஆண்டுச் சிறுபோகம் ஆகிய காலங்களின் நெற்கடன்களின் பகுப்பு விரிவாக மாவட்ட அடிப்படையில் பிற்சேர்க்கை 63இல் உள்ள அட்டவணையிற் கொடுக்கப்பட்டுள்ளது.

1973/74ஆம் பயிர்ச்செய்கை ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்த கடன் பங்கீடு அம்பாறை மாவட்டத்திலாகும். இங்கு பங்கீடுகள் ரூ. 171 இலட்சமாகவும், இது மொத்தக் கடன்களில் 15.7 சதவீதமாகவும், அமைகிறது. 1973/74ஆம் பெரும்போகத்தில் இரத்தினபுரி மாவட்டம் உயர்ந்த மீளப்பெற்ற அளவினைப் (88.3 சதவீதம்) பதிவுசெய்கிறது.

**(ஆ) கரும்பு, பருத்தி, துணை உணவுப் பயிர்களுக்கான கடன்கள்**

துணை உணவுப் பயிர்கள் கரும்பு, பருத்தி விற்பனவிற்கான கடன்களது பங்கீட்டின் விபரம் அட்டவணை II (ஆ) 8இல் தரப்பட்டுள்ளன. இப்பயிர் களுக்காக வழங்கப்பட்ட கடன்களில் உயர்ந்த தொகை மிளகாய் உற்பத் திக்கே (ரூ. 108 இலட்சம்) வழங்கப்பட்டுள்ளது. இது எல்லா பயிர்களுக்கும் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் 43.1 சதவீதத்தைப் பெறுகிறது.

1973/74இல் புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டம், கரும்பு, பருத்தி முதவியவற்றை உள்ளடக்கி விரிவாக்கப்பட்டு, 1973/74இல் முதன்முறையாக இப்பயிர்கள் இரண்டிற்கும் பயிர்ச்செய்கைக் கடன்கள் வழங்கப்பட்டன. முன்னைய ஆண்டில் பங்கிடப்பட்ட தொகையைக் காட்டிலும் துணைஉணவுப் பயிர்கள், கரும்பு, பருத்தி என்பவற்றிற்கான கடன் பங்கீடுகள், 138.2 சத வீதத்தால் அதிகரித்தன. முன்னைய ஆண்டில் இறுதி நிலையுடன் ஒப்புநோக்கு கையில் 1974/75 ஆம் பயிர்ச்செய்கை ஆண்டுக்குரிய பங்கீடுகள் மீதான முழுமை யற்ற தரவுகள், இப்பயிர்களுக்கான பங்கீடுகளில் ஒரு வீழ்ச்சியினைக் காட்டு கிறது. உலர் வலயத்தில் நிலவிய வரட்சியின் முதன்மையால் பயிர்ச்செய்கை ஆண்டின் தொடக்கம் தாமதம் அடைந்தமை இவ்வீழ்ச்சிக்குக் காரணமாகலாம்.

1972/73 ஆம் பயிர்ச்செய்கை ஆண்டில் பங்கிடப்பட்ட கடன்களில் 60.6 சதவீதம் மீளப் பெறப்பட்டது. இது முன்னையாண்டில் மீளப்பெற்ற அளவில் 11.7 சதவீதத்தால் குறைவாகும். முழுமையற்றத் தரவுகளின் தன்மையால் 1973/74 இல் மீளப்பெறப்பட்ட சடன்களின் சதவீதம் உண்மையாக மீளப் பெற்ற அளவினைக் காட்டுவதாக இல்லை.

துணை உணவுப் பயிர்கள், கரும்பு, பருத்தி என்பவற்றிற்கான கடன்களது மாவட்ட அடிப்படையிலான பகுப்புகள், பிற்சேர்க்கை அட்டவணையில் தரப் பட்டுள்ளன. முன்னைய ஆண்டினைப்போல் மிளகாய் (41.5 சதவீதம்) வெங் காயம் (66.6 சதவீதம்) என்பன்வற்றிற்கான கடன்களின் பெரும்பங்கு யாழ்ப் பாண மாவட்டத்திற்கு அமைகிறது. பதுளை மாவட்டம் உருளைக்கிழங்கு (70.5 சதவீதம்) கரும்பு (91.5 சதவீதம்) என்பனவற்றிற்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் உயர்ந்த பங்கினைப் பயன்படுத்தக், கொடுகடன் திட்டத்தின்கீழ் பருத்திப் பயிர்ச்செய்கைக்கான கடன்கள் அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு வழங்கப்பட்டன.

**(ii) கிராம வங்கிகள்**

கிராம வங்கிகளது வைப்புக்களும் முற்பணங்களும் அட்டவணை II (ஆ) 9 இல் தரப்பட்டுள்ளன. 1974இன் இறுதியில் இருந்த கிராம வங்கிகளின் எண்ணிக்கை 332 ஆகும். இது 1973இன் இறுதியில் இருந்த எண்ணிக்கையை விட சிறிது குறைவாகும். இவ்வேறுபாட்டிற்கு பலநோக்குக் கூட்டுறவு சங்கங் களின் மீள அமைப்பின் விளைவால் கிராமவங்கிகள் ஒன்றிணைக்கப்பட்டமை காரணமாகும். 50 கிராம வங்கிகளுடன் 71 அலுவலகங்கள் கிளைகளாக இணைக் கப்பட்டு சிறப்பான கிராம வங்கிகளாகத் தொழிற்படுகின்றன.

## அட்டவணை II (ஆ) 8

### உப உணவுப் பயிர்கள், கரும்பு, பருத்திக்கான புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டக் கடன்கள்

| பயிர்ச் செய்கை ஆண்டு | வழங்கப்பட்ட தொகை (ஆயிரம் ரூபாய்களில்) | | | | | | | | எல்லாப் பயிர்களையும் பொறுத்த மீளக்கொடுப்பனவின் நிலைமைகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | வழங்கப்பட்ட தொகையின் சதவீதமாக | | | |
| | மிளகாய் | சின்ன வெங்காயம் | உருளைக் கிழங்கு | காய்கறிகள் | ஏனைய உப உணவுப் பயிர்கள் | கரும்பு | பருத்தி | மொத்தம் | மொத்த மீளக் கொடுப்பனவுகள் (ரூ. '000) | பயிர் விளையாமையால் நீடிக்கப்பட்டவை (ரூ. '000) | வரத்தவறியவை ஆனால் வரவேண்டியவை (ரூ. '000) | வரத்தவறியவை (ரூ. '000) | மொத்த மீளக் கொடுப்பனவுகள் | பயிர் விளையாமையால் நீடிக்கப்பட்டவை | வரத்தவறுதலை ஆனால் வரவேண்டியவை | வரத் தவறியவை |
| 1967/68 | 1,947 | 1,979 | 1,145 | 412 | — | — | — | 5,483 | 4,531 | — | — | 952 | 82.6 | — | — | 17.4 |
| 1968/69 | 2,058 | 2,468 | 1,507 | 435 | — | — | — | 6,468 | 5,251 | — | — | 1,217 | 81.2 | — | — | 18.8 |
| 1969/70 | 2,359 | 3,011 | 1,836 | 342 | 6+ | — | — | 7,554 | 5,626 | — | — | 1,928 | 74.5 | — | — | 25.5 |
| 1970/71 | 1,202 | 1,606 | 2,243 | 137 | 7+ | — | — | 5,195 | 4,116 | — | — | 1,079 | 79.2 | — | — | 20.8 |
| 1971/72 | 2,039 | 2,950 | 4,230 | 255 | — | — | — | 9,474 | 6,848 | — | — | 2,626 | 72.3 | — | — | 27.7 |
| 1972/73 | 3,690 | 1,886 | 4,407 | 141 | 26+<br>1++ | — | — | 10,151 | 6,151 | — | 820 | 3,180 | 60.6 | — | 8.1 | 31.3 |
| 1973/74 | 10,767 | 6,471 | 6,526 | 167 | 247+<br>6++ | 612 | 159 | 24,955 | 10,546* | — | 4,319 | 10,090 | 42.3* | — | 17.3 | 40.4 |
| 1974/75* | 2,236 | 2,848 | 1,940 | 95 | 108+ | 35 | — | 7,262 | 1 | — | — | — | — | — | — | — |

\+ நிலக்கடலை, சோளம் ஏனையவை. ++ பம்பாய் வெங்காயம். * நிறைவு பெறாத தரவுகள். மூலம்: மக்கள் வங்கி.

அட்டவணை II (ஆ) 9இல் காட்டப்பட்டவாறு 1974இன் இறுதியில் கிராம வங்கிகளின் மொத்த சேமிப்பு வைப்புக்களின் தொகை ரூ. 627 இலட்சமாகும். இது முன்னை ஆண்டுச் சேமிப்பு வைப்புக்களைவிட உயர்வாகவும், 38.7 சதவீத உயர்ச்சியையும் காட்டுகிறது. 1974இல் வெளிநின்ற மொத்தக் கடன்கள் ரூ. 290 இலட்சங்களாக விளங்குகின்றது. அதேவேளை தேறிய வைப்புக்களின் நிலைமை ரூ. 335 இலட்சங்களாக விளங்கி முன்னை ஆண்டின் காணப்பட்ட வைப்பு நிலைமையிலிருந்து சிறிது அளவு முன்னேற்றமாக உள்ளது. எல்லா கிராம வங்கிகளுக்குமான சராசரி தேறிய வைப்பின் தொகை, வங்கி ஒவ்வொன்றிற்கும் ரூ. 100,985 ஆகும். நகை ஈட்டின்கீழ் வழங்கப்பட்ட கொடுகடன் 1974இல் தொடர்ச்சியாக அதிகரித்ததுடன் ஆண்டு இறுதியில் வெளிநின்றவைகள் முன்னைய ஆண்டிலும் 69.2 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டன. குறுகியகாலக் கடன்கள் நகைஈட்டின் கீழான கடன்கள் என்பவற்றின் வழங்கல் மட்டங்களின் அதிகரிப்பால் 1973ஆம் ஆண்டில் கிராம வங்கிகளில் காணப்பட்ட உறுதியான தேறிய வைப்புநிலை (மொத்த வைப்பிற்கும் முற்பணக் கொடுப்பனவிற்கும் இடையிலான வேறுபாடு) 1974இல் எதிரிடையான நிலைக்கு மாறியது.

கிராம வங்கிகளால் பங்கிடப்பட்ட கடன்கள் தேவைகளின் அடிப்படையிலான பகுப்பு வகையாக அட்டவணை II (ஆ) 10இல் தரப்பட்டுள்ளன. முன்னைய ஆண்டில் பங்கிடப்பட்ட தொகையைவிட உற்பத்தியாக்கத்திற்கான கடன்கள் 36.0 சதவீதத்தாலும் நுகர்விற்கான[1] கடன்கள் 94.4 சதவீதத்தாலும் அதிகரித்தன.

கிராம வங்கிகளின் வைப்புக்களினதும் முற்பணக் கொடுப்பனவுகளினதும் மாவட்ட அடிப்படையிலான பிரிவின் மீதான தரவுகள் பிற்சேர்க்கை அட்டவணை 64இல் தரப்பட்டுள்ளன.

முன்னைய ஆண்டின் 20 மாவட்டங்களுடன் ஒப்புநோக்க, 1974இல் உறுதியான ஒரு தேறிய வைப்பின் நிலை 6 மாவட்டங்களில் மட்டும் அவதானிக்கப்பட்டது 1973ஆம் ஆண்டினைப்போல் இரத்தினபுரி மாவட்டத்தின் கிராம வங்கிகள் உயர்ந்த தேறிய வைப்புக்களைக் கொண்டிருக்க, யாழ்ப்பாண மாவட்டத்தின் கிராம வங்கிகள் உயர்ந்த எதிரிடையான தேறிய வைப்புநிலைப் பதிவுசெய்கின்றது. பெரும்பாலான மாவட்டங்களின் கிராம வங்கிகளது பதிவு செய்யப்பட்ட தேறிய வைப்புநிலை 1974இல் எதிரிடையாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்புநோக்குகையில் கிராம வங்கிகளின் தொழிற்பாட்டில் இது ஒரு பின்னடைவாகும்.

### (iii) இலங்கை வங்கியின் கிராமக் கொடுகடன் திட்டம்

முன்னைய ஆண்டின் இறுதியில் தொழிற்பட்ட 79 துணை அலுவலகங்களுடன் ஒப்பிடுகையில் 1973ஆம் ஆண்டு இறுதியில் வேளாண்மைப்பணி நிலையங்களில் தொழிற்பட்ட இலங்கை வங்கியின் துணை அலுவலகங்கள் 202 ஆகும்.

---

1. வீடு கட்டுதல், கடன்மீட்பு, நுகர்வு, மின்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

## கிராமிய வங்கிகளின் வைப்புகளும்

| காலாண்டு முடிவு | | வங்கிகளின் எண்ணிக்கை | சேமிப்பு | | | நிலையான | | | வைப்புக் கணக் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | எண். | தொகை | சராசரி | எண். | தொகை | சராசரி | எண். |
| 1965 | திசெம்பர் ... | 8 | 2,924 | 491,626 | 168 | 9 | 4,734 | 526 | 2,933 |
| 1966 | திசெம்பர் ... | 13 | 4,636 | 703.011 | 152 | 15 | 22,737 | 1,516 | 4.651 |
| 1967 | திசெம்பர் ... | 27 | 8,792 | 1.305,846 | 118 | 41 | 65,381 | 1,595 | 8,833 |
| 1968 | திசெம்பர் ... | 44 | 17,359 | 3,110,576 | 179 | 287 | 222,614 | 776 | 17,646 |
| 1969 | திசெம்பர் ... | 68 | 28,626 | 5,712,893 | 199 | 724 | 460,168 | 636 | 29,350 |
| 1970 | திசெம்பர் ... | 90 | 49,939 | 16,109,287 | 322 | 892 | 799,117 | 896 | 50,831 |
| 1971 | திசெம்பர் ... | 111 | 60,371 | 17,188,297 | 285 | 838 | 676,106 | 807 | 61,209 |
| 1972 | திசெம்பர் ... | 242 | 702,822 | 22,703,136 | 221 | 812 | 617,150 | 760 | 103,634 |
| 1973 | மாச்சு .. | 287 | 118,277 | 25,559,969 | 216 | 724 | 610,340 | 843 | 119,001 |
| | யூன் ... | 309 | 135,695 | 30,082,027 | 222 | 704 | 658,499 | 935 | 136,399 |
| | செத்தெம்பர் ... | 332 | 164,195 | 33,716,197 | 205 | 1353 | 1,419,189 | 1,049 | 165,548 |
| | திசெம்பர் ... | 341 | 206,970 | 44,281,601 | 214 | 748 | 872,935 | 1,167 | 207,718 |
| 1974 | மாச்சு ... | 355 | 249,339 | 44,613,320 | 179 | 838 | 1,070,270 | 1,277 | 250,177 |
| | யூன் ... | 360 | 291,284 | 53,056,840 | 182 | 953 | 1,165,816 | 1,223 | 292,237 |
| | செத்தெம்பர் ... | 338 | 326,116 | 57.653,479 | 177 | 787 | 1,189,787 | 1,512 | 376,903 |
| | திசெம்பர் ... | 332 | 366,203 | 61,549,118 | 167 | 1271 | 1,186,243 | 933 | 367,474 |

முற்பணங்களும் 1965 - 1974



(தொகை ரூபாய்களில்)

| குகள் | | முற்பணங்கள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்தம் | | குறுங்காலக் கடன்கள் | | | அடகு வைத்தல் | | | மொத்தம் | | | மொத்த வைப்புக்களுக்கும், மொத்த முற்பணங்களுக்கும் இடையிலான வேறுபாடு |
| தொகை | சராசரி | எண். | தொகை | சராசரி | எண். | தொகை | சராசரி | எண். | தொகை | சராசரி | |
| 496,360 | 169 | 1,153 | 914,699 | 793 | வி.கி. | 252,596 | — | — | 1,167,295 | — | — 670,935 |
| 725,748 | 156 | 1,783 | 1,326,457 | 744 | 4,222 | 427,129 | 101 | 6,005 | 1,753,586 | 292 | — 1,027,838 |
| 1,371,227 | 155 | 2,897 | 2,029,476 | 701 | 6,598 | 633,213 | 96 | 9,495 | 2,662,689 | 280 | — 1,291,462 |
| 3,333,190 | 189 | 5,586 | 3,630,731 | 650 | 9,507 | 1,085,613 | 114 | 15,093 | 4,716,344 | 312 | — 1,383,154 |
| 6,173,061 | 210 | 7,893 | 5,572,281 | 706 | 14,325 | 1,523,646 | 106 | 22,218 | 7,095,927 | 319 | — 922,866 |
| 16,908,405 | 333 | 10,017 | 7,122,213 | 711 | 18,092 | 1,980,066 | 109 | 28,109 | 9,102,279 | 324 | + 7,806,126 |
| 17,864,403 | 292 | 10,725 | 7,144,913 | 666 | 21,044 | 2,171,734 | 103 | 31,769 | 9,316,647 | 293 | + 8,547,756 |
| 23,320,586 | 225 | 11,515 | 8,226,663 | 714 | 60,735 | 6,958,250 | 115 | 72,250 | 15,184,913 | 210 | + 8,135,673 |
| 26,170,309 | 219 | 12,619 | 9,150,305 | 725 | 75,344 | 8,663,631 | 115 | 87,963 | 17,813,936 | 203 | + 8,356,373 |
| 30,740,526 | 225 | 13,622 | 10,415,296 | 765 | 88,359 | 10,751,708 | 122 | 101,981 | 21,173,004 | 208 | + 9,567,522 |
| 35,135,386 | 212 | 15,721 | 12,640,518 | 804 | 121,337 | 17,034,204 | 140 | 137,058 | 29,674,722 | 217 | + 5,460,664 |
| 45,154,536 | 217 | 20,548 | 16,177,708 | 787 | 150,118 | 22,734,438 | 151 | 170,666 | 38,912,146 | 228 | + 6,242,390 |
| 45,683,590 | 183 | 26,438 | 21,086,710 | 798 | 187,594 | 29,045,830 | 155 | 214,032 | 50,132,540 | 234 | — 4,448,950 |
| 54,222,656 | 186 | 31,837 | 25,730,820 | 808 | 194,546 | 30,691,836 | 158 | 226,383 | 56,422,656 | 249 | — 2,200,000 |
| 58,843,266 | 180 | 24,442 | 24,514,511 | 1003 | 217,289 | 34,814,543 | 160 | 241,731 | 59,329,054 | 245 | — 485,788 |
| 62,735,361 | 171 | 26,819 | 29,008,262 | 1081 | 235,115 | 38,398,508 | 163 | 261,934 | 67,406,770 | 257 | — 4,871,409 |

மூலம்: மக்கள் வங்கி.

## அட்டவணை II (ஆ) 10

## தேவையின் அடிப்படையிலான கிராமிய வங்கிக் கடன்கள் — வருட முடிவில் உள்ளபடி

| தேவை | தொகை ரூபாய்களில் 1973 | தொகை ரூபாய்களில் 1974 | சதவீத அதிகரிப்பு 1974 | மொத்தத்தின் சதவீதம் 1973 | மொத்தத்தின் சதவீதம் 1974 |
|---|---|---|---|---|---|
| உற்பத்தி ... | 4,972,425 | 6,792,835 | 36.6 | 29.6 | 23.4 |
| இவற்றில் – ... | | | | | |
| 1. கமத்தொழில் ... | 4,258,530 | 5,417,264 | 27.2 | 25.4 | 18.7 |
| 2. கால்நடை வளர்ப்பு .. | 338,963 | 705,627 | 108.2 | 2.0 | 2.4 |
| 3. குடிசைக்கைத்தொழில் | 374,932 | 669,944 | 78.7 | 2.2 | 2.3 |
| வீடமைப்பு ... | 5,878,952 | 11,822,468 | 101.1 | 35.0 | 40.7 |
| கடன் மீட்பு ... | 3,635,801 | 6,947,658 | 91.1 | 21.6 | 24.0 |
| வர்த்தகம் ... | 731,718 | 1,102,465 | 50.7 | 4.4 | 3.8 |
| நுகர்வ ... | 719,674 | 1,086,127 | 50.9 | 4.3 | 3.7 |
| மின்சாரமூட்டல் ... | 49,177 | 139,334 | 183.3 | 0.3 | 0.5 |
| ஏனையவை ... | 806,987 | 1,117,375 | 38.5 | 4.8 | 3.9 |
| மொத்தம் | 16,794,734 | 29,008,262 | 72.7 | 100.0 | 100.0 |

மூலம்: மக்கள் வங்கி.

1974இன் இறுதியில் இலங்கை வங்கித் துணை அலுவலகங்களின் வைப்புக்கள் முற்பணக் கொடுப்பனவுகள் மீதான தரவுகள் அட்டவணை II (ஆ) 11 இல் தரப்பட்டுள்ளன. இத்துணை அலுவலகங்களின் தேறிய வைப்புநிலையானது, (நடைமுறைக் கணக்குகளின் மீதிகளைத் தவிர்த்து) 1974 இன் இறுதியில் ரூ. 28 இலட்சம் அல்லது ஒவ்வொரு அலுவலகத்திற்கும் ரூ. 13,587 ஆக அமைகிறது. 1973ஆம் ஆண்டின் இறுதியில் அவதானிக்கப்பட்ட தேறிய வைப்பு நிலையான ரூ. 12 இலட்சத்தைவிட, இது உயர்வானதாகும். நடைமுறைக் கணக்குகளின் மீதிகளையும் சேர்த்துக்கொள்ளப்பட்டால், 1974இன் இறுதியில் தேறிய வைப்புத்தொகை ரூ. 135 இலட்சமாக அல்லது ஒவ்வொரு அலுவலகத்திற்குமான தேறிய வைப்பு ரூ. 66,797 ஆக அமைவதுடன், முன்னைய ஆண்டின் இறுதித் தொகையான ரூ. 35 இலட்சத்தினைவிட ஒரு அதிகரிப்பாகவும் உள்ளது.

### அட்டவணை II (ஆ) 11

### விவசாய சேவை நிலையங்கள் உள்ள இடங்களில் இலங்கை வங்கி உப-அலுவலகங்கள்

### 1974 டிசெம்பர் 31இல் உள்ளவாறு வைப்புக்களும் முற்பணங்களும்

| வைப்புக் கணக்குகள் | கணக்குகளின் எண்ணிக்கை | தொகை ரூபாய்களில் |
|---|---|---|
| நடைமுறைக் கணக்குகள் | 5,718 | 11,078,066 |
| சேமிப்புக் கணக்குகள் | 35,593 | 10,363,444 |
| சிறப்புச் சேமிப்புக் கணக்குகள் | 98 | 30,100 |
| நிலையான கணக்குகள் | 22 | 92,760 |
| **மொத்தம்** | **41,431** | **21,564,370** |
| **கழித்து:** நடைமுறைக் கணக்குகள் | 35,713 | 10,486,304 |
| முற்பணங்கள் | கணக்குகளின் எண்ணிக்கை | தொகை ரூபாய்களில் |
| கடன்கள் | 6,321 | 7,741,758 |
| மேலதிகப் பற்றுகள் | 77 | 329,678 |
| **மொத்தம்** | **6,398** | **8,071,436** |

மூலம்: இலங்கை வங்கி.

இலங்கை வங்கித் துணை அலுவலகங்களால் 1974இல் வழங்கப்பட்ட கடன்களின் தொகை ரூ. 76 இலட்சமாகும். அட்டவணை II (ஆ) 12இல் காட்டப்பட்டவாறு, கடன்களில் பெரும்பாலான விகிதம் (44.8 சதவீதம்) பொறிகள்' கருவிகள் வாங்குவதற்குக் கொடுக்கப்பட்டன.

அட்டவணை II (ஆ) 12

### விவசாய சேவை நிலையங்கள் உள்ள இடங்களில் இலங்கை வங்கி உப – அலுவகங்கள் 1974இல் உள்ளவாறு தேவை அடிப்படையின் கடன்கள்*

| தேவை | தொகை ரூபாய்களில் | | மொத்தத்தின் சதவீதம் | |
|---|---|---|---|---|
| உற்பத்தி* ... | | 3,238,008 | | 42.86 |
| இவற்றில் : - ... | | | | |
| (அ) நெல் ... | 2,370,809 | | 31.38 | |
| (ஆ) ஏனைய உட–உணவுப் பயிர்கள் ... | 867,199 | | 11.48 | |
| எந்திரம், சாதனம் கொள்வனவு ... | | 3,384,683 | | 44.80 |
| கிணறு வெட்டுதல் ... | | — | | — |
| புதிய நிலங்களை அபிவிருத்தி செய்தல் ... | | — | | — |
| பயிர் பல்வகைப்படுத்தல் | | 68,594 | | 0.92 |
| பாற் பண்ணை ... | | 58,500 | | 0.78 |
| கோழிப் பண்ணை ... | | 25,020 | | 0.33 |
| சிறுகைத்தொழில் ... | | 11,500 | | 0.15 |
| கடன் மீட்பு ... | | 50,850 | | 0.67 |
| வீடமைப்பு ... | | 372,628 | | 4.93 |
| வர்த்தகம் ... | | 79,500 | | 1.05 |
| மின்சாரமூட்டுதல் ... | | — | | — |
| நுகர்வு ... | | 122,910 | | 1.63 |
| ஏனையவை ... | | 143,004 | | 1.89 |
| மொத்தம் | | 7,555,197 | | 100.00 |

* நிறைவுபெறாத தரவுகள்.

மூலம்: இலங்கை வங்கி.

இக்கடன்கள் 1973ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 39,720 இலிருந்து 1974 ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 34 இலட்சமாக அதிகரித்தது. 1974இல் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் உற்பத்தியாக்கக் கடன்கள் 42.9 சதவீதத்தை அடக்குகிறது. இதன் மொத்தம் நெற் பயிர்ச்செய்கைக்காகும். 1973ஆம் ஆண்டுடன் ஒப்புநோக்குகையில் மொத்தக் கடன் அமைப்பில், 1974இல் சிறு மாற்றம் காணப்படுகிறது. 1974இல் வேளாண்மை உற்பத்திக்கும் பொறிகள் கருவிகள் வாங்குவதற்கும் வழங்கப்பட்ட கடன்களின் விகிதம் மொத்தக் கடன்களில் 87.7 சதவீதத்திற்கு வகையாகிறது

துணை அலுவலகங்களின் மாவட்ட வகையான நிலை பிற்சேர்க்கையின் அட்டவணை 65இல் கொடுக்கப்பட்டுள்ளது. அநுராதபுர மாவட்டத்தின் துணை அலுவலகங்கள் உயர்ந்த வைப்புக்களைப் (ரூ. 30 இலட்சம்) பதிவுசெய்ய பதுளை மாவட்டம் ஒவ்வொரு வைப்புக்கணக்கிற்கும் உயர்ந்த மீதியைப் (ரூ. 1463) கொண்டுள்ளது. உயர்தொகையான கடன்கள் அநுராதபுர மாவட்டத்தில் பங்கிடப்பட ஒவ்வொரு கணக்கிற்கான உயர்ந்த நிலுவை (ரூ. 51,463) மன்னார் மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்டது.

### (iv) கிராமக் கொடுகடனின் முழு அளவிலான மதிப்பீடு

மூன்று திட்டங்களின்கீழ் முன்பு பகுத்தாயப்பட்ட கிராமக் கொடுகடனின் முழு அளவிலான நிலை அட்டவணைகள் II (ஆ) 13இலும் II (ஆ) 14இலும் தரப்பட்டுள்ளன.

## அட்டவணை II (ஆ) 13

## கிராமியத் துறைக்கான கடன்களின்* பயன் அடிப்படையில் அமைந்த பாகுபாடு

தொகை ரூபாய்களில்

| பயன் | புதிய கமத்தொழிற் கொடுகடன் திட்டங்கள்–மக்கள் வங்கி | கிராமிய வங்கிகள் | இலங்கை வங்கி கொடுகடன் திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பயிர்ச் செய்கை | 109,276,000 | 3,583,712 | 3,238,008 | 116,097,220 |
| இவற்றில் – | | | | |
| (i) நெல் | 89,375,000 | | 2,370,809 | |
| (ii) உப உணவுப் பொருட்கள் | 19,095,000 | | 867,199 | |
| (iii) கரும்பும் பருத்தியும் | 806,000 | | | |
| கால்நடை வளர்ப்பு | | 561,606 | 83,520 | 645,126 |
| சிறு கைத்தொழில் | | 537,520 | 11,500 | 549,020 |
| பயிர்ப் பன்முகப்படுத்தல் | | — | 68,594 | 68,594 |
| யந்திரங்களினதும், உபகரணங்களினதும் கொள்வனவு | | — | 3,384,683 | 3,384,683 |
| கடன் மீட்சி | | 4,469,660 | 50,850 | 4,520,510 |
| நுகர்வு | | 353,975 | 122,910 | 476,885 |
| வீடமைப்பு | | 8,107,079 | 372,628 | 8,479,707 |
| மின்சாரமூட்டல் | | 109,435 | — | 109,435 |
| கிணறு தோண்டுதல் | | — | — | — |
| வர்த்தகம் | | 740,170 | 79,500 | 819,670 |
| ஏனையவை | | 1,246,420 | 143,004 | 1,389,424 |
| **மொத்தம்** | 109,276,000 | 19,709,577 | 7,555,197 | 136,540,774 |

மூலங்கள்: இலங்கை வங்கி, மக்கள் வங்கி.

* 1974இல் திசெம்பர் 31ஆம் நாளின்படி மேலதிக நிலுவை ரூ. 329,678ஐயும் மீட்கப்படாத ஈட்டுநிலுவை ரூ. 38,398,508ஐயும் தவிர்த்து

புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டத்தின் கீழ் பங்கிடப்பட்ட கடன்கள் 1974இல் கிராமத்துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் 80.1 சதவீதத்திற்கு வகைகூறுகிறது. கடன்களின் தேவை வகையான பாகுபாடு, உயர்ந்த வீதம் பயிர் வேளாண்மைக்கு பங்கிடப்பட்டதென்பதைக் காட்டுகிறது.

அட்டவணை II (ஆ) 14இல் காட்டப்பட்டவாறு தேறிய வைப்புநிலை எல்லா மாவட்டங்களிலும் எதிரிடையாக உள்ளது. தேறிய வைப்புத் தொகையின் உயர்ந்த எதிரிடை யாழ்ப்பாண மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்டது.

அட்டவணை II (ஆ) 14

**கிராமியத் துறைக்கான கொடுகடன்களின் மாவட்ட ரீதியான பகுப்பு**

(ரூபாய்களில்)

| மாவட்டம் | மொத்த வைப்புகள்* | மொத்தக் கடன்கள்** | வைப்புகளுக்கும் கடன்களுக்குமிடையிலான வேறுபாடுகள் |
|---|---|---|---|
| கொழும்பு | 14,211,257 | 15,230,247 | — 1,018,990 |
| களுத்துறை | 3,377,711 | 5,187,561 | — 1,809,850 |
| கண்டி | 5,123,892 | 7,762,650 | — 2,638,758 |
| மாத்தளை | 1,658,680 | 5,654,841 | — 3,996,161 |
| நுவரெலியா | 788,457 | 3,779,109 | — 2,990,652 |
| காலி | 4,661,839 | 8,232,870 | — 3,571,031 |
| மாத்தறை | 1,922,510 | 5,870,397 | — 3,947,887 |
| அம்பாந்தோட்டை | 2,290,547 | 16,233,293 | — 13,942,746 |
| யாழ்ப்பாணம் | 2,934,035 | 30,675,264 | — 27,741,229 |
| மன்னார் | 213,581 | 12,579,347 | — 12,365,766 |
| வவுனியா | 551,545 | 18,413,760 | — 17,862,215 |
| மட்டக்களப்பு | 137,684 | 13,984,087 | — 13,846,403 |
| அம்பாறை | 813,276 | 27,005,316 | — 26,192,040 |
| திருகோணமலை | 377,545 | 23,443,546 | — 23,066,001 |
| குருநாகல் | 10,370,956 | 16,710,207 | — 6,339,251 |
| புத்தளம் | 2,784,807 | 9,138,547 | — 6,353,740 |
| அநுராதபுரம் | 3,396,466 | 30,792,748 | — 27,396,282 |
| பொலனறுவை | 4,194,393 | 20,735,048 | — 16,540,655 |
| பதுளை | 4,245,141 | 11,004,023 | — 6,758,882 |
| மொனராகலை | 466,558 | 4,592,303 | — 4,125,745 |
| இரத்தினபுரி | 5,717,380 | 8,596,423 | — 2,879,043 |
| கேகாலை | 2,983,405 | 4,425,941 | — 1,442,536 |
| **மொத்தம்** | **73,221,665** | **300,047,528** | **— 226,825,863** |
| கழி - அடகுக் கடன் | ......... | 38,398,508 | ......... |
| தேறிய நிலைமை | 73,221,665 | 261,649,020 | — 188,427,355 |

மூலம்: இலங்கை வங்கி, மக்கள் வங்கி.

* நடைமுறைக் கணக்கு வைப்புகளான ரூபாய்கள் 11,078,066 ஐத் தவிர்த்து.

** மேலதிகப்பற்றான ரூபாய் 329,678 ஐத் தவிர்த்து.